# புல்லாங்குழல்

புல்லாங்குழல் ஒரு ஊதும் வாத்தியம். இது மூங்கிலால் செய்யப்பட்டது.
இந்த வாத்தியத்தில் 8 துளைகள் உள்ளன.அதை விட்டு ஒரு துளை இருக்கின்றது. அது ஊதும் துளை ஆகும். இதை ஊதினால் ஒரு இனிமையான ஒலி கேட்க்கும்.

எனக்கு புல்லாங்குழல் வாசிப்பது மிகவும் விருப்பம். நான் 2005இல் வாசிக்கத் தொடங்கினேன். எனது அப்பா எனக்கு இந்த வாத்தியத்தை வாசிக்கப் படிப்பித்தார். இந்த வாத்தியத்தை மிகவும் நன்றாக வாசிப்பவர் ஒருவர் ரமணி ஆகும்.


(Ramani)

நான் வாசிக்கும்பொழுது, எனக்கு சந்தோசமாக இருக்கும். ஏனென்றால், அது ஒரு இனிமையான ஒலியைக் கொடுக்கும். புல்லாங்குழலை நாம் இலகுவாக எங்கவும் கொண்டு செல்லலாம். புல்லாங்குழல் வாசித்த ஒரு கடவுள் கிருஷ்ணன் ஆகும்.


(Krishna)

நான் புல்லாங்குழல் வாசிக்கும்பொழுது என் உள்ளத்தால் உணர்ந்து, ஆசையுடன் வாசிப்பேன். எனக்கு வாசிக்கும்பொழுது சந்தோசம் வருவதைப் போல், மற்றவர்களும் புல்லாங்குழல் வாசித்து அதே சந்தோசம் பெறவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

*யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்*



(fløyte)

தீபா(12 வயது)